# விசேட தேவையுடைய மாணவர்களின் கற்றல் மேம்பாட்டில் பெற்றோரின் வகிபாகம் (மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்திற்குட்பட்ட விசேட அலகுடைய பாடசாலைகளை அடிப்படையாக் கொண்ட அளவைநிலை ஆய்வு)

முகமட் உசனார் நவ்பர்காந்

*கல்வி பிள்ளை நலத்துறை, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.*
nouferkhan@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

இன்றைய உலகமயமாதல் யுகத்தில் மனித சமூகம் கல்வியில் பல்வேறு வகையிலும் முன்னேறியுள்ளது. உலகியல் மாற்றங்களுக்கேற்ப ஆளுமைமிக்க மனித சமூகத்தை உருவாக்கும் பொறுப்பு கல்வித்துறைக்கு உண்டு. அனைவருக்கும் கல்வி என்ற நிலை வலுப்பெற்றுள்ள இன்றைய காலகட்டத்தில் விசேட தேவையுடைய மாணவர்களும் கல்வி கற்பதற்கென விசேட அலகுகளை உள்ளடக்கிய பாடசாலைகள் உருவாக்கப்பட்டு கற்றல் கற்பித்தல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை விசேட அம்சமாகும். என்றபோதிலும் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான கல்விச் செயற்பாடுகள் முன்னேற்றகரமாக முறையில் இல்லாததையும் அவதானிக்கலாம். அதாவது விசேட தேவையுடைய மாணவர்களுக்கு கல்வி வழங்க பாடசாலைகள் தயாராக உள்ள போதிலும் பெற்றோர்கள் இதற்காகத் தயாராகுவது குறைவாகவே உள்ளது. இதனடிப்படையிலேயே விசேட தேவையுடைய மாணவர்களின் கற்றல் மேம்பாட்டில் பெற்றோரின் வகிபங்கை அறிவதற்காக மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தின் விசேட அலகுடைய பாடசாலைகள் நோக்க மாதிரியின் அடிப்படையில் ஆய்வுக்காக எடுத்துக் கொள்ளப்பட்டதுடன் மாணவர்களின் 81 பொற்றோர்களும், 10 ஆசிரியர்களும், பாடசாலைகளை நிர்வகிக்கும் 03 அதிபர்களும் நோக்க மாதிரியின் அடிப்படையிலும் இவ்வாய்வுக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். ஆய்வு முடிவுகளிலிருந்து, விசேட தேவையுடைய மாணவர்களின் கற்றல் மேம்பாட்டில் பெற்றோரின் ஈடுபாடு குறைவதற்கான காரணங்களாக பெற்றோருக்கு விசேட தேவையுடைய மாணவர்கள் பற்றிய போதிய தெளிவின்மை, பெற்றோரினுடைய பொருளாதார நெருக்கடி, பெற்றோரின் எதிர் மனப்பாங்கு, குடும்பத்தில் விசேட தேவையுடைய வேறு மாணவர்கள் காணப்படுதல், போன்ற காரணங்களால் இம்மாணவர்களின் கற்றலில் பெற்றோரின் வகிபாகம் குறைகிறது. இதற்கான தீர்வுகளாக ஆசிரியர்கள் பெற்றோருக்கு தகுந்த வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகள் வழங்குதல், பாடசாலையில் இம் மாணவர்கள் தொடர்பாக நடைபெறும் கூட்டங்களுக்கு பெற்றோரை பங்கு பெறச் செய்தல், ஆசிரியர்கள் மாணவர்களின் வீட்டிற்கு சென்று பெற்றோருடன் மாணவர்களின் கற்றல் மேம்பாடு தொடர்பில் கூடிய கவனம் செலுத்தல் போன்ற விதப்புரைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

**திறவுச் சொற்கள்:** விசேட தேவையுடையோர், கற்றல்மேம்பாடு, பெற்றோர், வகிபாகம்

## அறிமுகம்

சர்வதேச ரீதியாக கல்வி ஓர் அடிப்படை உரிமையாகையால் சாதாரண மாணவர்களைப் போன்று விசேட தேவையுடைய மாணவர்களும் கல்வியைப் பெறுவதன் ஊடாக சமூகத்தின் தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புகள் நிறைவேற வழிசமைக்கின்றன. பொதுவாக பார்வைக் குறைபாடு உடையோர், கேட்டல் குறைபாடு உடையோர், உடல் உறுப்புக்கள் பாதிப்படைந்தோர் போன்றவர்களேயே விசேட தேவையுடைய மாணவர்களாகக் கருதுவதுண்டு. எனினும் இத்தகைய கருத்து இன்று ஏற்றுக்கொள்ளப்படுவதாக இல்லை. அதாவது விசேட தேவையுடையோர் எனும் பதம் இவர்களை மாத்திரமன்றி இவர்களுடன் இணைந்த வகையில் இன்னும் பல பிரிவினர்களை உள்ளடக்குகின்றது. மீத்திறன் உடையோர், கற்றல் இயலாமை உடையோர், மொழிதலும் மொழிக் குறைபாடு உடையோர், மெதுவான உள் வளர்ச்சியுடையோர், உக்கிர மனவெழுச்சிப் பிரச்சினையுடையோர், பல்வகைமை

இயலாமையுடையோர், உடலியல் குறைபாடு உடையோர், சுகாதாரக் குறைபாடுயுடையோர், பார்வைக் குறைபாடு உடையோர், கேட்டல் குறைபாடு உடையோர், பூரணமான பார்வைக் குறைபாடுடையோரும் கேட்டல் குறைபாடுடையோரும், தற்சிந்தனை, மூளையில் ஏற்படும் பாதிப்பு என 13 வகையாக இலங்கையில் பாகுபடுத்தியுள்ளனர். ஆனால் இவை போதுமானதல்ல இதனுள் இன்னும் பல பிரிவினர் உள்ளடங்குவர் என்ற கருத்தும் காணப்படுகிறது. இத்தகைய விசேட தேவைகளுடைய மாணவர்களுக்கென இன்று அதிகம் அனேகமான பாடசாலைகளில் விசேட அலகு உருவாக்கப்பட்டு கற்றல் செயன்முறைகள் முன்னெடுக்கப்படுகின்ற போதும் கற்றலில் மேம்பாடு என்பது குறைந்தளவிலே காணப்படுகின்றது. காரணம் பெற்றோரின் பங்களிப்பு குறைவாகக் காணப்படுகின்றமையாகும். அந்த வகையில் விசேட தேவைகளுடைய மாணவர்களின் கற்றல் மேம்பாட்டில் பெற்றோரின் வகிபாகம் குறையும் போது ஏற்படும் சவால்களை இனங்கண்டு ஆராய்வதன் மூலம் பிள்ளைகளின் கற்றலை மேம்படுத்துவதற்கு முன்வைப்பதை நோக்கமாகக் கொண்டு இவ்வாய்வு அமைகிறது.

**ஆய்வுப் பிரச்சினை**

கல்வி ஓர் அடிப்படை உரிமையாகையால் எக்காரணம் கொண்டும் ஒருவரது கல்வி உரிமையை மறுதலிக்க முடியாது. உடல், உள ரீதியில் இயலாமை கொண்டவர்களாக காணப்பட்டாலும் அவர்களும் கல்வியை பெறுவதற்கான உரிமையுடையவர்கள் என்ற எண்ணக்கருவுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகின்றது. ஆனால் இந்த விடயம் பற்றி ஆய்வாளனின் ஆய்வு பிரதேசத்தில் விசேட தேவையுடைய மாணவர்களின் பெற்றோர்களுக்கு போதிய விழிப்பு நிலை இல்லாமையினால் இம் மாணவர்களை பாடசாலை கற்றல்,கற்பித்தல் செயற்பாட்டிற்குள் கொண்டு வருவது குறைவாகவே காணப்படுகிறது. மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தில் விசேட தேவையுடைய மாணவர்கள் கற்பதற்கான விசேட அலகுகள் நான்கு உருவாக்கப்பட்டுள்ள போதிலும் இம் மாணவர்களுக்கான விசேட தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களும் மிக குறைவாகவே காணப்படுகின்றனர். விசேட தேவையுடைய மாணவர்கள் குறித்த ஆய்வு பிரதேசத்தில் இருந்து பல்கலைக்கழகத்திற்கோ, கல்வியற் கல்லூரிகளுக்கோ செல்வது மிக குறைவாகவே உள்ளது. இது இம்மாணவர்களுக்கான எதிர்கால வாழ்க்கையை கேள்விக் குறியாக்கும் ஒரு விடயமாகும்.

இவ்வகை மாணவர்கள் கற்றலை தொடர்ச்சியாக மேற்கொள்வதில் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். இதில் பெற்றோரின் ஈடுபாடு குறைவு, இம் மாணவர்களுக்கு பொருத்தமான கற்றல் உபகரணங்கள் இல்லாமை, சமூகம் இவ்வாறான மாணவர்களை ஏற்றுக்கொள்வது குறைவாகவே உள்ளமை மிக முக்கியமான ஒரு பிரச்சினையாகும். விசேட தேவையுடைய மாணவர்களின் கற்றலில் குடும்ப நிலமை சாதகமாக அமைவது மிக குறைவாகவே உள்ளது. இதில் ஒரு சில குடும்பங்களில் வேறு விசேடதேவையுடைய மாணவர்களும் காணப்படுகின்றனர். உதாரணமாக ஒரே குடும்பத்தில் தொடராக ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பிள்ளையும் விசேட கல்வித் தேவையுடைய பிள்ளையாக காணப்படுகின்றது. இது தொடர்பில் பெற்றோருக்கு போதிய விளக்கமின்மையால் இப் பிள்ளைகளை எவ்வாறு பராமரிப்பது, அவர்களது கற்றலை எவ்வாறு முன்னெடுப்பது என்பதில் அல்லல் படுகின்றனர். இதனால் தமது பிள்ளைகளை கற்றலை நோக்கி நகர்த்துவதில் தயக்கம் காட்டுவதனையும் அறிய முடிகிறது.

மேலும் பெற்றோர், ஆசிரியர்கள், அதிபர் இணைந்து செயற்படும் போக்கு குறைவாகவே உள்ளது. ஆசிரியர்கள் முன்வந்தால் பெற்றோர்கள் முன்வருவது மிக குறைவாகவே உள்ளது அத்துடன் பாடசாலையில் இருந்து இம் மாணவர்களின் வீடுகள் அதிக தூரத்தில் இருப்பதனால் ஆசிரியர்கள் இம்மாணவர்களின் வீடு தரிசித்தல் செயற்பாட்டை முன்னெடுப்பதில் பாரிய பிரச்சினை உள்ளது. இவ்வகை மாணவர்களின் பெற்றோர்கள் தினக்கூலி வேலைக்கு செல்பவர்களாகவே கூடுதலானவர்கள் காணப்படுகின்றனர். ஒவ்வொரு நாளும் தொழிலுக்கு சென்றால்தான் அன்றைய நாளுக்கான உணவு கிடைக்கும் எனும் அடிப்படையிலும் பெற்றோர் இயங்கி வருகின்றனர். இந்த சூழ்நிலையில் இம் மாணவர்களின் கற்றலில் இவர்களது பங்களிப்பை வழங்க முடியாத நிலையில் உள்ளனர். இதனால்

இம் மாணவர்களின் கற்றல்மேம்பாட்டில் பெற்றோரின் வகிபாகம் எந்த அளவு உள்ளது என்பதையும் அறிய வேண்டி உள்ளது.

**ஆய்வுப் பிரச்சினைக் கூற்று**

மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தின் விசேட அலகுடைய பாடசாலைகளில கல்வி பயிலும் விசேட தேவையுடைய மாணவர்களின் கற்றல் மேம்பாட்டில் பெற்றோரின் ஈடுபாடு குறைந்தளவிலே காணப்படுகிறது.

**ஆய்வின் பொது நோக்கம்**

விசேட தேவையுடைய மாணவர்களின் கற்றல செயற்பாடுகளில் எதிர் கொள்ளும் சவால்களைக் கண்டறிந்து அவர்களது கற்றலினை மேம்பாட்டில் பெற்றோரின் வகிபாகத்தினை அதிகரிக்கச் செய்வதற்கான சிபாரிசுகளை முன்வைத்தல் ஆகும்.

**சிறப்பு நோக்கங்கள்**

1. விசேட தேவையுடைய மாணவர்களுக்கு வழங்கப்படும் கற்றல் செயன்முறைகளை இனங்காணல்.
2. விசேட தேவையுடைய மாணவர்களின் கற்றல் மேம்பாட்டில் பெற்றோரின் ஈடுபாட்டை இனங்காணல்.
3. விசேட தேவையுடைய மாணவர்கள் எதிர்நோக்கும் கற்றல் பிரச்சினைகளை கண்டறிதல்.
4. விசேட தேவையுடைய மாணவர்களின் கற்றல் மேம்பாட்டில் பெற்றோரின் ஈடுபாட்டை அதிகரிப்பதற்கு மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகளையும், ஆலோசனைகளையும் பரிந்துரைத்தல்.

**இலக்கிய மீளாய்வு**

அவுஸ்திரேலியாவில் மேற்கொண்ட ஆய்வில் பெற்றோர்கள் சாதாரண மாணவர்கள் மற்றும் விசேட தேவைகளுடைய மாணவர்கள் ஆகிய இருவரும் இணைந்த வகுப்பறைச் செயற்பாட்டில் கல்விசார், சமூகம்சார், உணர்வுசார் நன்மைகளை அதிகம் கவனத்தில் கொள்கின்றார்கள் (Gilmore, 2003). மேலும் இவ்வாய்வில் அறியப்பட்ட முடிவில் சில பெற்றோர்கள் தங்களது பிள்ளைகள் அது கற்றல் சார் தேவைகள் விசேட வகுப்பறை செயற்பாடுகளில் நிறைவேற்றப்படும் எனவும் மேலும் சிலர் சாதாரண மாணவர்களுடன் இணைந்த வகுப்பறைச் செயற்பாட்டிலேயே தங்களது பிள்ளை அனைத்து தேவைகளையும் பெறுகின்றது எனவும் நம்பிக்கை கொள்கின்றனர்.

சாதாரண மாணவர்களுடன் இணைந்த வகுப்பறைச் செயற்பாட்டில் விசேட தேவைகளுடைய மாணவர்கள் ஈடுபடும் போது பெற்றோர்கள் கீழ்வரும் விடயங்களில் அதிகம் கவனம் செலுத்துதல் வேண்டும்:-

1) பாடசாலைக்கு வந்து மாணவர்களை அவதானித்தல் அவசியம்.
2) விருதுபெற்ற தொடர்பாடல் திறன்களை கொண்டு பாடசாலை செயற்படுதல் வேண்டும்.
3) அடிக்கடி ஆசிரியர் மீது கொண்டுள்ள நம்பிக்கையினை உறுதிப்படுத்திக் கொளளல் வேண்டும்.
4) பாடசாலை சென்று அடிக்கடி பார்த்தல் கூட்டங்களில் பங்கேற்றல் பாடம் நடைபெறும் போது அதனை அவதானித்தல் (Jhon Elkins Kristina, 2003)

Noora (2015) ஆம் ஆண்டு விசேட கல்வித் தேவையுடைய மாணவர்களின் பெற்றோரின் ஈடுபாடு எனும் தலைப்பில் பாகிஸ்தானில் செய்யப்பட்ட ஆய்வில் பின்வரும் முடிவுகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. சில பிரதேசங்களில் உள்ள பெற்றோர்கள் ஏழைக் குடும்பங்களாக காணப்படுகின்றனர், பொருளாதாரக் காரணிகளும் இம் மாணவர்களின் கற்றலில் பாதிப்பு செலுத்துகின்றது, பெற்றோர், சமூகம், ஆசிரியர்கள்

இந்த மூன்று பங்காளிகளின் ஒத்துழைப்பினால் பிள்ளைகளின் கற்றலை அதிகரிக்க முடியும். அதாவது ஒரு பக்கம் பிள்ளையை ஊக்குவிக்கும் பாடசாலை, பிள்ளையை ஆதரிக்கும் சமூகம், பிள்ளையை பராமரிக்கும் பெற்றோர் ஆகிய மூன்று தரப்பினரும் ஒன்றாக காணப்படுவதாக ஆய்வு முடிவுகள் சுட்டுகின்றது.

**ஆய்வு முறையியல்**

ஆய்வு முறையியல் சிறப்பானதாகக் காணப்படும் பட்சத்திலேயே தீர்வுகள் நம்பகத் தன்மையாக அமையும். இவ்வாய்வில் எண், அளவு ரீதியான முறையியல்களும், பண்பு ரீதியான முறையியல்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. எண் ரீதியான முறையியலினுள் எண்கள், அட்டவணைகள், வரைபடங்கள், மாணவர் தொகை, விகிதாரங்கள் போன்றன உள்ளடக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் புறவயத் தன்மையாக ஆய்வு கொண்டு செல்லப்படுகிறது.

ஆய்வு தொடர்பான கோட்பாடு ரீதியான உறுதிப்படுத்தலுடன் தொடர்பு கொண்டதாக பண்பு ரீதியான முறையியல் காணப்படுகின்றது. இங்கு சம்பந்தப்பட்ட பாடசாலைகளின் ஆசிரியர்கள், மாணவர்களிடத்தில் வினாக்கொத்து மூலமாகவும், அதிபர்கள், ஆங்கிலப் பாடத்திற்கான சேவைக்கால ஆலோசகர்கள், மாணவர்களின் பெற்றோர்களிடத்தில் நேர்காணல் மூலமாகவும் பெறப்பட்ட தகவல்கள், அபிப்பிராயங்கள், எண்ணங்கள், வெளிப்பாடுகள் போன்ற அகவயமான உணர்வுகளும் ஆய்வில் கருத்திற் கொள்ளப்படுகின்றன.

இதன்படி அளவு ரீதியான, பண்பு ரீதியான விடயங்களை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு அமைவதால் இவ்வாய்வில் கலப்பு ஆய்வு வடிவம் பயன்படுத்தப்பட்டுள்ளது. அத்தோடு வினாக்கொத்து மற்றும் நேர்காணல் மூலம் பெறப்பட்ட தரவுகளை அளவு ரீதியாகவும், பண்பு ரீதியாகவும் பகுப்பாய்வு செய்து அதன் மூலம் முடிவுகளைக் கண்டறிவதாக இவ்வாய்வானது அமைவதால் இது ஒரு அளவை நிலை ஆய்வாக அமைந்துள்ளது.

**மாதிரித் தெரிவு**

அந்தவகையில் ஆய்விற்காகத் தெரிவு செய்யப்பட்ட் மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தில் காணப்படும் விசேட அலகுடைய பாடசாலைகள் மூன்றும் நோக்க மாதிரி அடிப்படையில் ஆய்வினை மேற்கொள்ளும் பொருட்டு தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இவ்வாய்வில் அனைத்து மாணவர்களின் பெற்றோர்களையும் ஏகவீனக் குடித்தொகையாகக் கருதி அவர்களிலிருந்து மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்ட அனைத்துப் பாடசாலைகளையும் பிரதிநிதித்துப்படுத்தக் கூடியவாறு நோக்க மாதிரியெடுப்பு முறையின் அடிப்படையில் விசேட தேவையுடைய மாணவர்களின் பெற்றோர்களும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இதனடிப்படையில் ஆய்விற்காகத் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் காணப்படும் விசேட அலகுடைய பாடசாலைகளில் கல்வி பயிலும் விசேட தேவையுடைய மாணவர்களின் 81 பெற்றோர்களும் ,10 ஆசிரியர்களும், பாடசாலைகளை நிர்வகிக்கும் 03 அதிபர்களும் நோக்க மாதிரியின் அடிப்படையிலும் இவ்வாய்வுக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறாக இவ்வாய்வுக்காக ஆய்வாளனால் மாதிரிகள் தெரிவு செய்யப்பட்டு ஆய்வுக்குட்படுத்தப்பட்டு உள்ளனர்.

**தரவுப் பகுப்பாய்வும் வியாக்கியானமும்**

விடே தேவையுடைய மாணவர்களின் கற்றல் மேம்பாட்டில் பெற்றோரின் வகிபங்கு என்னும் தலைப்பில் மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தின் விசேட அலகுடைய பாடசாலைகள் அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வை முன்னெடுப்பதற்காக ஆய்வு நோக்கத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட சிறப்பு நோக்கங்களுக்கமைவாக ஆய்வு வினாக்கள் தயாரிக்கப்பட்டன. மேலும் மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு வெவ்வேறாக தயாரிக்கப்பட்ட வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டதோடு அதிபரிடம் நேர்முகம் காணலின் மூலம் ஆய்வுக்குத் தேவையான தரவுகள் சேகரிக்கப்பட்டன. புள்ளிவிபர

ரீதியாக பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டு துல்லியமாக சதவீதத்தில் காட்டப்பட்டு Microsoft Office Excel உதவியுடன் சலாகை வரைபுகள் மூலம் காட்டப்படுகின்றன.

மேலும் பண்பு ரீதியாகப் பெறப்பட்ட தகவல்களும் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டு, வியாக்கியானம் செய்யப்பட்டு விடயப்பரப்புடன் முன்வைக்கப்பட்ட கருத்துக்களுக்கு ஒத்துப் போகின்ற விடயங்களை அவை தொடர்பாக ஏற்கனவே இரண்டாம் அத்தியாயமான இலக்கிய மீளாய்வில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுடன் ஒப்பிட்டு கலந்துரையாடலுக்கும் உட்படுத்தப்பட்டுள்ளன. மேலும் நேர்காணல், அவதானம் போன்ற ஆய்வுக் கருவிகளின் மூலம் பெறப்பட்ட தகவல்களும் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டு அவை வியாக்கியானம் செய்யப்பட்டு அவை தொடர்பாக ஏற்கனவே மும்மொழியப்பட்டுள்ள விடயங்களுடன் கலந்துரையாடலுக்கும் உட்படுத்தப்பட்டுள்ளன.

**முடிவுகள்**

**விசேட தேவையுடைய மாணவர்களுக்கு வழங்கப்படும் கற்றல் செயன்முறைகளை இனங்காணல்.**

பாடசாலையின் வளங்களை பொறுத்தவரை மாணவர்களின் கற்றலில் விசேட தேவையுடைய மாணவர்களின் வகுப்பறைச் சூழல் பிரதான இடத்தை வகிக்கின்றது. பாடசாலையின் வகுப்பறைச் சூழல் சிறப்பாக அமையாது விடின் கற்றல் செயற்பாட்டினை சிறப்பாக மேற்கொள்ள முடியாது. அந்த வகையில் பாடசாலையின் வகுப்பறைச் சூழல் தொடர்பாக பாடசாலையின் ஆசிரியர்களிடம் வினவியபோது அவர்கள் பின்வருமாறு பதிலளித்தனர். இது பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றது.

**அட்டவணை 1: வகுப்பறைச் சூழல்**


| **விடையளித்த விதம்** | **விடையளித்தோர் தொகை** | **சதவீதம்** |
|---|---|---|
| மிகப்பொருத்தம் | 3 | 30 |
| பொருத்தம் | 5 | 50 |
| திருப்தி | 2 | 20 |
| **மொத்தம்** | **10** | **100** |

விசேட தேவையுடைய மாணவர்களின் வகுப்பறைச் சூழல் தொடர்பாக பெறப்பட்ட தரவுகளின் பகுப்பாய்வு அடிப்படையில் 30 சதவீதமான மிகப்பொருத்தம் என ஆசிரியர்களும், பொருத்தம் என்று 50 சதவீதமான ஆசிரியர்களும், திருப்தி என 20சதவீதமான ஆசிரியர்களும் பதில்களை வழங்கியுள்ளனர்.

**விசேட தேவையுடைய மாணவர்களின் கற்றல் மேம்பாட்டில் பெற்றோரின் ஈடுபாட்டை இனங்காணல்.**

இது தொடர்பாக அறிவதற்காக பாடசாலையின் ஆசிரியர்களிடம் விசேட தேவையுடைய மாணவர்களின் கற்றல் மேம்பாட்டில் மாணவர்களின் பெற்றோரின் பங்களிப்புத் தொடர்பாக வினவியபோது அவர்கள் அளித்த பதில்கள் பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றது.

**உரு 1: பெற்றோரின் ஒத்துழைப்பு**





விசேட தேவையுடைய மாணவர்களின் பெற்றோர் ஆசிரியரின் கற்பித்தல் செயற்பாட்டிற்கு ஒத்துழைப்பு வழங்குகின்றனரா? என கேட்கப்பட்ட வினாவிற்கு மிக அதிகம் என 10 வீதமான ஆசிரியர்களும், அதிகம் என 10 வீதமான ஆசிரியர்களும், ஓரளவு என 20 வீதமான ஆசிரியர்களும், குறைவு என 40 வீதமான ஆசிரியர்களும், மிகக்குறைவு என 20 வீதமான ஆசிரியர்களும் பதில்களை வழங்கினர்.பகுப்பாய்வு முடிவுகளின் பிரகாரம் பெற்றோரது ஒத்துழைப்பு குறைவாகவே காணப்படுகின்றது என்ற முடிவுக்கு வரலாம்.

**விசேட தேவையுடைய மாணவர்கள் எதிர்நோக்கும் கற்றல் பிரச்சினைகளை கண்டறிதல்.**

இதனடிப்படையில் விசேட தேவையுடைய மாணவர்களினை பாடசாலைக்கு தொடராக அனுப்புதல் பற்றி வினவப்பட்ட போது அளித்த பதில்கள் பின்வரும் உருவில் காட்டப்பட்டுள்ளது.

**உரு 2 : பெற்றோர்கள் மாணவர்களினை பாடசாலைக்கு அனுப்புதல்**




இது தொடர்பாக பெற்றோர்களிடம் வினவப்பட்ட போது 14 சதவீதமான பெற்றோர்கள் மிகக் குறைவு எனவும் 52 சதவீதமான பெற்றோர்கள் குறைவு எனவும் 34 சதவீதமான பெற்றோர்கள் சாதாரணம் பதிலளித்தனர். இதன் தொடர்ச்சியாக குறைவு அல்லது மிகக் குறைவு என்பதற்கான பதிலளிக்கப்பட்ட பெற்றோர்களிடம் அதற்கான காரணங்கள் பற்றி வினப்பட்ட போது அவர்கள் அளித்த பதில்கள் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

**அட்டவணை 2: பெற்றோர்கள் பாடசாலைக்கு மாணவர்களை தொடர்ச்சியாக அனுப்பாமைக்கான காரணங்கள்**

| விடையளித்த விதம் | விடையளித்தோர் தொகை | சதவீதம் |
|---|---|---|
| போக்குவரத்துச் செலவு அதிகம் | 37 | 53 |
| பாடசாலை தொலைவில் அமைந்துள்ளமை | 18 | 26 |
| பிள்ளையை அழைத்துச் செல்ல வேறு உதவிகள் இன்மை | 7 | 10 |
| பிள்ளைக்கான பாராமரிப்புச் செலவு அதிகம் | 5 | 7 |
| விசேட தேவையுடைய வேறு பிள்ளைகள் காணப்படல் | 3 | 4 |
| **மொத்தம்** | **70** | **100** |

பெற்றோர்கள் பாடசாலைக்கு மாணவர்களை தொடர்ச்சியாக அனுப்பாமைக்கான காரணங்கள் பற்றி வினவப்பட்ட போது போக்குவரத்துச் செலவு அதிகம் என 53 சதவீதமான பெற்றோர்களும், பாடசாலை தொலைவில் அமைந்துள்ளமை என 26 சதவீதமான பெற்றோர்களும், பிள்ளையை அழைத்துச் செல்ல வேறு உதவிகள் இன்மை என 10 சதவீதமான பெற்றோர்களும், பிள்ளைக்கான பாராமரிப்புச் செலவு அதிகம் என 7 சதவீதமான பெற்றோர்களும், விசேட தேவையுடைய வேறு பிள்ளைகள் காணப்படல் என 4 சதவீதமான பெற்றோர்களும் பதிலை வழங்கினர். ஆகவே ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட பாடசாலைகளில் பெற்றோர்கள் பாடசாலைக்கு மாணவர்களை தொடர்ச்சியாக அனுப்புவதில் பொருளாதார நிலை தாக்கம் செலுத்துவதை அறிய முடிகிறது.

**விசேட தேவையுடைய மாணவர்களின் கற்றல் மேம்பாட்டில் பெற்றோரின் ஈடுபாட்டை அதிகரிப்பதற்கு மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகளையும், ஆலோசனைகளையும் பரிந்துரைத்தல்.**

இதனை அறியும் நோக்கில் விசேட தேவையுடைய மாணவர்களின் கற்றல் செயற்பாட்டினை அதிகரிப்பதற்கு பெற்றோரின் ஒத்துழைப்பை எவ்வாறு பெற முடியும் என ஆசியர்களிடம் வினவப்பட்ட போது அவர்கள் அளித்த பதில்களை பின்வரும் அட்டவணை காட்டுகிறது.

**அட்டவணை 3 : விசேட தேவையுடைய மாணவர்களின் கற்றல் செயற்பாட்டில் பெற்றோரின் ஒத்துழைப்பை பெறல்**

| விடையளித்த விதம் | விடையளித்தோர் தொகை | சதவீதம் |
|---|---|---|
| பெற்றோர்களை தொடரச்சியாக பிள்ளையை பாடசாலைக்கு அனுப்ப ஊக்குவித்தல் | 4 | 40 |
| பாடசாலைக்கு தொலைவில் அமைந்துள்ள பிள்ளையை அழைத்துச் வர ஏற்பாடுகளைச் செய்தல் | 2 | 20 |
| பெற்றோர்களை அழைத்து பொருத்தமான வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகளை வழங்குதல் | 2 | 20 |
| பெற்றோருடன் நெருக்கமான தொடர்பினை ஏற்படுத்தி பிள்ளைக்கு வீட்டிலும் பயிற்சி அளித்தல் | 1 | 10 |
| பெற்றோருக்கு பிள்ளையின் நிலை தொடர்பில் தெளிவுபடுத்தி அவர்களது உதவிகளை பெறல். | 1 | 10 |
| **மொத்தம்** | **10** | **100** |

கற்றல் செயற்பாட்டினை அதிகரிப்பதற்கு பெற்றோரின் ஒத்துழைப்பை எவ்வாறு பெற முடியும் என ஆசியர்களிடம் வினவப்பட்ட போது பெற்றோர்களை தொடரச்சியாக பிள்ளையை பாடசாலைக்கு அனுப்ப ஊக்குவித்தல் என 40 சதவீதமான ஆசிரியர்களும், பாடசாலைக்கு தொலைவில் அமைந்துள்ள பிள்ளையை அழைத்துச் வர ஏற்பாடுகளைச் செய்தல் என 20 சதவீதமான ஆசிரியர்களும், பெற்றோர்களை அழைத்து பொருத்தமான வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகளை வழங்குதல் என 20 சதவீதமான ஆசிரியர்களும், பெற்றோருடன் நெருக்கமான தொடர்பினை ஏற்படுத்தி பிள்ளைக்கு வீட்டிலும் பயிற்சி அளித்தல் என 10 சதவீதமான ஆசிரியர்களும், பெற்றோருடன் நெருக்கமான தொடர்பினை ஏற்படுத்தி பிள்ளைக்கு வீட்டிலும் பயிற்சி அளித்தல் என 10 சதவீதமான ஆசிரியர்களும் பதிலை வழங்கினர். ஆகவே ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட பாடசாலைகளில் விசேட தேவையுடைய மாணவர்களின் கற்றல் செயற்பாட்டில் பெற்றோரின் ஒத்துழைப்பு குறைவாகக் கிடைக்கப்பெறுகிறது என்பதை அறிய முடிகிறது.

**தீர்வுகளும் ஆலோசனைகளும்**

**விசேட தேவையுடைய மாணவர்களுக்கு வழங்கப்படும் கற்றல் செயன்முறைகளை இனங்காணல்.**
**முடிவுகள்**

ஆய்வுக்குட்படுத் பாடசாலைகளில் 70 சதவீதமான வகுப்பறைச் சூழல் விசேட கல்வித் தேவையுடைய மாணவர்களுக்கு பொருத்தமற்றதாகவே காணப்படுகிறது. இடவசதி குறைவு, அதிகப்படியான மாணவர்கள் காணப்படுகின்றமை, கேட்டல், பார்வை குறைபாடுடைய மாணவர்களுக்கு ஏற்ற வகையில் வகுப்பறை ஒழுங்கமைக்கப்படவில்லை. அடிக்கடி மின்னினைப்பு துண்டிக்கப்படும் போது கற்றலை முன்னெடுப்பதில் சிரமமாக உள்ளதையும் அறிய முடிந்தது. வகுப்பறைகளை கண் கவரும் வகையிலும் நேர்த்தியாகவும் அமைய வேண்டிய தேவைப்பாடும் உள்ளது. மாணவர்கள் பாடரீதியாக கற்பதற்கான வசதிகள் போதுமான அளவில் இல்லாமை காரணமாக கற்றல், கற்பித்தலை சிறப்பாக மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுவதுடன் கற்றலை இலகுபடுத்தக்கூடிய மேலதிக வளங்கள் இல்லாமையும் கண்டறியப்பட்டுள்ளது.

**விதப்புரைகள்**

விசேட கல்வித் தேவையுடைய மாணவர்களுக்கான ஏற்ப வகுப்பறைச் சூழல் ஏற்படுத்தப்பட வேண்டும். நன்கு காற்றோட்டமுள்ள வகையிலும் கவர்ச்சியான முறையிலும் வகுப்பறைகள் மாற்றியமைக்கப்படல் வேண்டும். அதற்கு பாடசாலையின் உதவியுடன் பெற்றோர் கல்வி அதிகாரிகளின் உதவிகளைப் பெற வழிவகுத்தல் அவசியம். மாணவர்கள் இலகுவாக அணுகும் வகையில் கட்டடம் அமைதல் வேண்டும். வகுப்பறையின் பருமனுக்கு ஏற்ப மாணவர்களின் எண்ணிக்கையை பேணுவதுடன் தேவையற்ற பொருட்களை அப்புறப்படுத்தப்படுத்தல் , பொருத்தமான தளபாட வசதிகளை ஏற்படுத்தி அவர்களது தேவைக்கு ஏற்ப அமைத்தல். விசேட கல்வித் தேவையுடைய மாணவர்களுக்கான என விசேட கவனம் செலுத்துவதற்கு பெற்றோர், பழைய மாணவர் சங்கம் , சமூக மட்ட அமைப்புக்கள் மற்றும் அரசு சார்பற்ற நிறுவனங்கள் கவனம் எடுப்பதற்கும் அவற்றின் மூலம் உதவிகளைப் பெறவும் அதிபர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

**விசேட தேவையுடைய மாணவர்களின் கற்றல் மேம்பாட்டில் பெற்றோரின் ஈடுபாட்டை இனங்காணல்.**

**முடிவுகள்**

விசேட தேவையுடைய மாணவர்களின் பெற்றோர் ஆசிரியரின் கற்பித்தல் செயற்பாட்டிற்கு ஒத்துழைப்பு குறைவாகவே வழங்குகின்றனர் என 80 சதவீதமான ஆசிரியர்கள் குறிப்பிட்டிருந்தனர். தங்கள் பிள்ளைகள் பற்றி தன்னம்பிக்கை குறைந்தவர்களாகவும் தாழ்வு மனப்பான்மை உடையவர்களாகவும் பெற்றோர்கள் காணப்படுகின்றனர். சில குடும்பங்களில் கூடுதலான பிள்ளைகள் இருப்பதனால் இம்மாணவர்களுக்காக பெற்றோர்கள் கூடுதலான ஈடுபாட்டை வழங்குவது குறைவாக உள்ளது. பெற்றோர் பாடசாலைக்கு வருவதே குறைவாக உள்ளது. ஆசிரியர்கள்பெற்றோருடன் அடைத்

தொடர்பினை பேணுவதிலும் சிக்கல் நிலை உள்ளதாகவும் கண்டறியப்பட்டுள்ளது. அவ்வாறே மாணவர்களின் கற்றல் நிலை தொடர்பாக அறிவதும் குறைவாக உள்ளதுடன் வீட்டு பயிற்சிகளிலும் குறைவான அக்கறையுடன் செயற்படுவதும் கண்டறியப்பட்டுள்ளது.

**விதப்புரைகள்**

விசேட தேவைகள்சார் மாணவர்களது கற்றற் செயற்பாட்டில் பெற்றோர் ஆசிரியர்களின் வகிபங்கு பிரதானமானது என்பதை உணர்ந்து பெற்றோர் மற்றும் ஆசிரியர் செயலாற்றல் வேண்டும். மேலும் விசேட தேவைகள்சார் மாணவர்களது கற்றலை மேம்படுத்தும் வகையில் ஆசிரியர்கள் அறிவுரைகளை வழங்குதல் அவசியமாகும். பெற்றோர் பிள்ளைகளுடன் போதிய நேரம் செலவிடாமையினால் பிள்ளைகள் பல்வேறு மன அழுத்தங்களுக்கு உள்ளாகின்றனர். பெற்றோர் எத் தொழிலில் ஈடுபட்டாலும் பிள்ளைகளுக்கென குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கி அவர்களுடைய பிரச்சினைகள், தேவைகள் குறித்து கலந்துரையாடுதல் வேண்டும். அதிபர் பெற்றார் கூட்டங்களில் மாணவர்களின் செயற்பாடுகளை கண்காணிப்பதற்கு போதிய நேரத்தை ஒதுக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்த வேண்டும். பெற்றோர் பிள்ளைகளின் தேவைகள் குறித்தும், பிரச்சினைகளின் குறித்தும் பிள்ளைகளிடம் அன்புடன் கேட்டுத் தீர்ப்பதற்கு அறிவுறுத்தல் வேண்டும். வகுப்புக்களை விட பெற்றோரின் ஈடுபாடே மாணவர்களின் கற்றலை முனனேற்றும் என்பதை பெற்றோர்களுக்குப் புரிய வைத்தல் வேண்டும்.

**விசேட தேவையுடைய மாணவர்கள் எதிர்நோக்கும் கற்றல் பிரச்சினைகளை கண்டறிதல்**

**முடிவுகள்**

விசேட தேவையுடைய மாணவர்களினை பாடசாலைக்கு தொடராக அனுப்புதல் குறைவு(86 சதவீதம்) என ஆய்வுக்குட்படுத்திய வேளை கண்டறிய முடிந்தது. பெற்றோர்கள் பாடசாலைக்கு மாணவர்களை தொடர்ச்சியாக அனுப்புவதில் போக்குவரத்துச் செலவு அதிகம், பாடசாலை தொலைவில் அமைந்துள்ளமை, பிள்ளையை அழைத்துச் செல்ல வேறு உதவிகள் இன்மை, பிள்ளைக்கான பாராமரிப்புச் செலவு அதிகம், விசேட தேவையுடைய வேறு பிள்ளைகள் காணப்படல் போன்ற பல காரணங்கள் கண்டறியப்பட்டுள்ளதுடன் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட பாடசாலைகளில் பெற்றோர்கள் பொருளாதார நிலை மற்றும் வறுமை என்பன இவ் விசேட தேவையுடைய மாணவர்களின் கல்வியில் தாக்கம் செலுத்துவதும் கண்டறியப்பட்டுள்ளது.

**விதப்புரைகள்**

பாடசாலைக்கு தொடர்ச்சியாக வரும் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் அவர்களுக்கு பரிசளிப்பு விழாக்களை பாடசாலை மட்டத்தில் முன்னெடுப்பது அவசியம் என்பதுடன் அது பற்றி பெற்றோருக்கு அறியச்செய்தல். பாடசாலை தொலைவில் அமைந்துள்ள பிள்ளையை பாடசாலைக்கு அழைத்துச் வரத் தேவையான போக்குவரத்து வசதிகள் மற்றும் வேறு உதவிகளினைப் பாடசாலை சமூகம் ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும். விசேட தேவையுடைய மாணவர்களினை பாடசாலைக்கு அனுப்ப முடியாத போது வீட்டுச் சூழலைக் கற்றலுக்கு ஏற்ற வகையில் மாற்றியமைக்க பெற்றோரிருக்கு அறிவுறுத்துவதோடு அவர்களது ஒத்துழைப்பினையும் பெறல் வேண்டும்.

**விசேட தேவையுடைய மாணவர்களின் கற்றல் மேம்பாட்டில் பெற்றோரின் ஈடுபாட்டை அதிகரிப்பதற்கு மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகளையும், ஆலோசனைகளையும் பரிந்துரைத்தல்.**

**முடிவுகள்**


விசேட தேவையுடைய மாணவர்களின் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் எதிர்காலம் தொடர்பில் அக்கறை அற்றவர்களாக உள்ளனர். தங்கள் பிள்ளைகள் பற்றி தன்னம்பிக்கை குறைந்தவர்களாகவும் தாழ்வு மனப்பான்மை உடையவர்களாகவும் பெற்றோர்கள் காணப்படுகின்றனர். பெற்றோர் பாடசாலைக்கு வருவதே குறைவாக உள்ளது. சில குடும்பங்களில் கூடுதலான பிள்ளைகள் இருப்பதனால் இம்மாணவர்களுக்காக பெற்றோர்கள் கூடுதலான ஈடுபாட்டை வழங்குவது குறைவாக உள்ளது அத்துடன்

அயல் இடங்களில் உள்ள பொருத்தப்பாடுடைய இவ் விசட அலகுள்ள பாடசாலைகளில் தங்கள் பிள்ளைகளை இணைத்து கற்பிக்க ஆர்வம் குறைந்தவர்களாகவும் காணப்படுகின்றனர்.

**விதப்புரைகள்**

கற்றலில் இவர்களது நிலைமைகளை எடுத்துக்காட்ட வேண்டும், விசேட கல்வித் தேவையுடைய மாணவர்கள் செய்த சாதனைகளை எடுத்துக் கூறுதல்,பாடசாலை கூட்டங்களுக்கு இவர்களுக்கு அழைப்பு விடுத்தல். விசேட கல்வித் தேவை உடைய பிள்ளைகளின் எதிர்காலம் பற்றிய விழிப்புணர்வு அவசியம் ஆசிரியர்,அதிபர் மற்றும் கல்விப் பணிப்பாளர்கள் ஊடாக மனநிலையில் படிப்படியாக மாற்றத்தைக் கொண்டு வருதல், இப் பிள்ளைகளது குடும்பத்துடன் பாடசாலை நெருக்கமான உறவை வலுப்படுத்துவதற்கான வழிகாட்டல்களை தொடர்ச்சியாக வழங்குதல். பிற இடங்களில் இயங்கும் விசேட கல்வித் தேவை உடைய பிள்ளைகளின் பாடசாலைகளுடன் பெற்றோர்களுக்கு தொடர்பை ஏற்படுத்திக் கொடுத்தல்.

விசேட தேவையுடைய மாணவர்களின் கற்றல் மேம்பாட்டில் பெற்றோரின் வகிபங்கானது வினைத்திறனற்ற நிலையிலும் குறைந்த அளவிலும் உள்ளது என இதன் இவ்வாய்வு ஊடாக கண்டறியப்பட்டது.




**மூலம் : ஆசிரியர்களிடம் பெறப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டு பெறப்பட்டது.**

**உசாத்துணைகள்**

அருள்மொழி, செ. (2008). **கல்வி ஆய்வு முறைகள்,** எவகிறீன் அச்சகம், மட்டக்களப்பு.

அந்தோணி ஜோசப். (2003). **கல்வி சார் வளப்பகிர்வுகளின் பகுப்பாய்வு,** கல்வி முதுமாணி யாழ்ப்பாணம்.

இலங்கை திறந்த பல்கலைக்கழகம். (2007). **விசேட நிலைமைகள் மற்றும் கற்றல் தேவைக்கான அறிமுகம்**, நாவல, நுகேகொட.

இலங்கை திறந்த பல்கலைக்கழகம். (2010). **வழிகாட்டல் ஆலோசனை**, நாவல, நுகெகொட.

சந்தானம், எஸ். (1999). **கல்விசார் அறைகூவல்கள்**, சாந்தா பப்ளிஸர்ஸ், சென்னை.

சந்திரசேகரன், சோ. (2004). **கல்வி ஒரு பன்முக நோக்கு**, உமா பதிப்பகம், கொழும்பு.

சந்திரசேகரன், சோ. (2008). **சமகால கல்வி முறையில் சில பரிமாணங்கள்**, உமா பதிப்பகம், கொழும்பு 06.

சறோஜினி, பி, ஆர்., ராஜமோகன், ஆர். (2009). **சிறப்பு கல்விசார் சிந்தனைகள்**, சாந்தா பப்ளிஸர்ஸ், சென்னை.

சின்னத்தம்பி, க. (2007). **கல்வி ஆய்வியல்**, ஜெயா இன்டர்நேசனல், கொழும்பு.

செல்வராஜா, மா. (2005). **கல்வியியல் அடிப்படை எண்ணக்கருக்கள்**, எவர்கிறீன் அச்சகம்.

தனபாலன், பா. (2008). நவீன கற்றல் கற்பித்தல் முறையியல்கள், குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

தம்பிராசா சிவகுமார். (2009). **விசேட கல்வி அறிமுகமும் பிரயோகங்களும்**, குரு பிறிண்டர்ஸ், திருநெல்வேலி..

தனராஜ், தை. (2005)**. செயல்வழி ஆய்வு ஓர் அறிமுகம்**, குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

ரோலன்ட் அபேபால. (2016). **புதிய கற்றல் செயல்நெறிகள்**, சாரா வெளியீடு, கொழும்பு.

ஜெயராஜா, சபா. (2011). **கல்வியில் எழுவினாக்கள்**, சேமமடு பொத்தகசாலை, பீபல்ஸ் பார்க், கொழும்பு.

மகேசன், ஏ. (2010). **விசேட கல்வியும் ஆலோசனை வழங்கலும்**, 1261 திருமலைவீதி, பூம்புகர், மட்டக்களப்பு

முத்துலிங்கம், ச. (1996). **கல்வியும் உளவியலும்** -1. சேமாடு பதிப்பகம், கொழும்பு.

முத்துலிங்கம், ச. (2002). **கல்வியும் உளவியலும்-** 2, சேமமடு பதிப்பகம், கொழும்பு.

மகேசன், ஏ. (2009). **வழிகாட்டல் ஆலோசனைச் சேவை**, கிழக்குப் பல்கலைக்கழகம் மட்டக்களப்பு.

Anne Stonehouse. (2006). Guiding children's behavior in positive ways, NCAC.

Basic tips child care provides can used to guide children's behavior. (2015). United States Department of agriculture.

David, .J, Dwyer and Jeffrey., B, Hecht. (1992). Minimal Parental Involvement, Academic Department.

David pelcovitz,ph.D. (2013). The impact of working mothers on child development, US.

Invesopedia. (2020). What Is A Special Needs child? [Online] Available at; https://www. Investopedia.com/terms/s/specialneedschild.asp[accessed 01 November 2021